கானலுக்கு வந்து, கொடைக்கானலில் உள்ள மாளிகைகளில் தங்கி, கோஹினூர் மாளிகை, கவர்ன்மெண்ட் ரெஸ்ட் ஹவுஸ் இங்கெல்லாம் தங்கி அங்கு சென்ற கமிட்டிக் கூட்டங்களுக்கும், அங்கத்தினர் களுக்கும் இடம் இல்லாமல் பல சிக்கல்கள் ஏற்பட்டன என்பதால், மிடில் கிளாஸ் மக்களுக்குத் தங்கவென்று இந்த ரெஸ்ட் ஹவுசுகளை உடனடியாகக் கட்ட, இந்த ஆண்டிலேயே கட்டுவதற்கு ஏதாவது முயற்சி எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கொடைக்கானலில் குறிஞ்சி மலர் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் பூக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, 12 ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்படும் நெருக்கடியைப் பற்றிக்கவனிக்கலாம். (சிரிப்பு)

திரு. ஆர். நாகசுந்தரம் : தலைவர் அவர்களே, இது தவிர வேறு எங்கெங்கு விடுதிகள் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்பொழுது பூரணமாக பட்டியல் இல்லை, என்றாலும், இந்த ஆண்டு சிதம்பரம், காஞ்சி இன்னும் சில இடங்களில் கட்ட உத்தேசம். திருச்செந்தூரில், கன்யாகுமரியில் ஏற்கனவே கட்டடம் ஆரம்பிக்கப்பட்டு முடிக்கும் தறுவாயில் இருக்கின்றது.

Hotel Review and Survey Committee

* 278. *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state whether any hotel in this State has received ranking by the Hotel Review and Survey Committee of the Union Government?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆம்.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தலைவர் அவர்களே, இந்த ஓட்டல்களுக்கு மத்திய சர்க்காரால் பண உதவி ஏராளமாக அளிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 24 ஓட்டல்கள் தர வாரியாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதற்கென்று மத்திய சர்க்காரால் தனியாக சர்வே செய்யப்படுவதற்காக சர்வே கமிட்டி போட்டு, அவர்கள் எல்லா மாநிலங்களையும் சுற்றிப் பார்த்து, ஓட்டல்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். 1, 2, 3, 4 ஸ்டார் ஓட்டல் என்கிற அடிப்படையில் தரம் பிரித்திருக்கிறார்கள். மிக உயர்ந்த ஓட்டலை 4 ஸ்டார் ஓட்டலாகப் பிரித்ததில் சென்னையில் கனிமாரா ஓட்டலையும், மதுரையில் பாண்டியன் ஓட்டலையும் நாலு-ஸ்டார் ஓட்டல்களாகப் பிரித்திருக்கிறார்கள். இன்னும் ஓட்டல் சவேரா (சென்னை), ஓட்டல் தாசபிரகாஷ் (சென்னை), ஓட்டல் விக்டோரியா (சென்னை), ஓட்டல் இம்பீரியல் (சென்னை), உட்லண்ட்ஸ் ஓட்டல்

1970 மார்ச் 9]

(சென்னை), தாசபிரகாஷ் (ஊட்டி), சவாய் ஓட்டல் (ஊட்டி), ரிட்ஸ் ஓட்டல் (குன்னூர்), ஓட்டல் அசோகா (சென்னை), இவை மூன்று ஸ்டார் ஓட்டல்களாகவும், ஓட்டல் க்ளாரிட்ஜஸ் (சென்னை), கீதா ஓட்டல் (சென்னை), ஹாம்ப்டன் ஓட்டல் (குன்னூர்), ஓட்டல் துவாரகா (சேலம்), கார்ல்டன் ஓட்டல் (கொடைக்கானல்) இவை இரண்டு ஸ்டார் ஓட்டல்களாகவும், டூரிஸ்ட் ஹோம் (சென்னை), ஓட்டல் ஸ்வாகத் (சென்னை), குப்தாஸ் ஓட்டல் (சென்னை), ஓட்டல் அலங்கார் (கோவை), ஓட்டல் குரு (கோவை), ஓட்டல் அரிஸ்டோ இவை ஒரு ஸ்டார் ஓட்டல்களென்றும் பிரித்திருக்கிறார்கள். இன்னும் 'குவாலிடி ரெஸ்டாரன்ட்' என்பதை ஒரு 'அப்ரூவ்ட் ரெஸ்டாரென்ட்' என்ற வகையில் தனியாகச் சிபார்சு செய்திருக்கிறார்கள்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: சென்னையில் நாலு நட்சத்திரம் பெற்ற ஓட்டல் ஒன்று இருக்கிறது. மேற்கொண்டு அமைக்க அரசாங்கத் தரப்பில் முன் வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மாநில அரசு 4, 5 ஸ்டார் ஓட்டல் அமைக்க தக்க அளவில் நிதி வசதி இல்லை என்றாலும், தனியார் அப்படிக் கட்டுவதற்கு முன் வந்தால், மத்திய சர்க்கார் 50 சதவிகிதம் உதவி கட்டணை அளிக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு பெரிய ஓட்டல்களைக் கட்ட முன் வருகிறார்கள். தனியாருக்குத் தகுந்த இடம் கிடைத்து அப்படிச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் ஐந்து ஸ்டார் ஓட்டல் ஏதாவது இருக்கிறதா? ஐந்து ஸ்டார் ஓட்டல் கட்டுவதற்கு யாராவது முயற்சி எடுத்துக் கொண்டால், அரசு கடன் உதவி அளிக்க முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஐந்து ஸ்டார் ஓட்டல் அமைக்கப்படவில்லை. மத்திய சர்க்காரால் அமைக்கப் பட்டுள்ள அசோகா ஓட்டலையும் ஐந்து ஸ்டார் ஓட்டலாக எடுக்கப் படவில்லை. அந்த ஓட்டலையே 4 ஸ்டார் ஓட்டல் என்றுதான் சர்வே கமிட்டி எடுத்திருக்கிறது. டெல்லியிலே உள்ள 'ஓபிராய்' ஓட்டலை ஐந்து ஸ்டார் ஓட்டலாக எடுத்திருக்கிறார்கள். அவர்களும் சென்னையில் கூட இடம் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். தகுந்த இடம் கிடைத்தால், நிச்சயமாக ஐந்து ஸ்டார் ஓட்டலை ஓபிராய் நிறுவனத்தார் ஏற்பாடு செய்வார்கள்.

திரு. கே. விநாயகம்: சார், நம்முடைய சட்டசபை அங்கத்தினர்கள் தங்கும் ஓட்டல் ஒன்று இருக்கிறதே. அதை எந்த ஸ்டாரிலே எடுத்திருக்கிறார்கள். அதை எந்த ஸ்டாரிலும் எடுக்கவில்லையென்றால், அதற்கு அரை-ஸ்டார் ஓட்டல் என்றாவது நியமிக்க முடியுமா? எந்த ஸ்டாருமே கொடுக்க மறுக்கிறார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மாநில அரசாங்கம் செய்வது ஒன்றும் இல்லை. மத்திய சர்க்கார் வகுத்தெடுத்த ஒரு குழு அமைத்து, அவர்கள் இப்படிப் பிரித்திருக்கிறார்கள். இந்த ஓட்டல் அந்த அளவிற்கு இடம் பெறவில்லை.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : திரு. விநாயகம் அங்கே தங்கியிருக்கிறார்களா ?

திரு. கே. விநாயகம் : அங்கே சாப்பிட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையெல்லாம் பார்க்காமலேயே கேள்வி போட்டால் எப்படி ?

மதுரை மாவட்ட அரசு விதைப் பண்ணைகள்

* 279 வினா—**திரு. எஸ். அக்னிராஜு :** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் அரசாங்க விதைப் பண்ணைகள் எத்தனை உள்ளன ?

(இ) அவைகளின் மூலமாக செய்யப்பட்ட விநியோக அளவு எவ்வளவு ?

(உ) அவைகளின் மொத்த மதிப்பென்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விவர அறிக்கை * ஒன்று மன்றப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். அக்கினிராஜு : பண்ணை விதைகளை பஞ்சாயத்து யூனியன் மூலம் வினியோகம் செய்யப் படுகிறது. ஒவ்வொரு யூனியனும் விவசாயிகளுக்கு போதுமான அளவில் விதைகள் கொடுக்க விதைப்பண்ணைகள் போதவில்லை. ஆகவே, வட்டந் தோறும் விதைப் பண்ணைகளை அமைக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படிப் பட்ட தகவல் இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம் கொடுக்கலாம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, அரசாங்கப் பண்ணைகள் புஞ்சை தானியங்களான வீரிய கம்பு, வீரிய சோளம் போன்ற விதைகளையும் உற்பத்தி செய்கின்றனவா ? இல்லையென்றால் அந்த விதைகள் ஒரு எக்கருக்கு 40, 50 ரூபாய் என்று விலை இருப்பதால், அரசாங்கப் பண்ணையில் இவற்றை உற்பத்தி செய்ய முயற்சி செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விதைப் பண்ணைகள் நஞ்சை, புஞ்சை இரண்டு விதைகளையும்தான் உற்பத்தி செய்கின்றன. பொதுவாக சில பண்ணைகள் மண் வளம், பாசன வசதி இவை இல்லாமல் இருக்கும் அளவில் ஏற்பாடு செய்துவிட்டு இருப்பதால், நாம் விரும்பும் அளவில் செய்ய முடியவில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, இந்த அரசாங்க விதைப் பண்ணைகளை ஏற்படுத்தும்போது, என்னென்ன செயல் முறைகளை அரசு கையாள்கிறது ?

---

* 502–503-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.